**04.07.2018**

**பொருள் எண்.1**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2018–19ன் கீழ் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் தார் சாலைகள் அமைக்க நிர்வாக அனுமதி வேண்டி பிரேரணைகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடந்த 11.05.2018 அன்று சமர்ப்பிக்கப்பட்டதன் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12981/2018/இ3, நாள்.27.06.2018ல் தெரிவித்துள்ளபடி கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை அனுமதித்து பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. கோடியில் | நிதி பங்கீட்டு விரபம் ரூ.கோடியில் | | | |
|---|---|---|---|---|---|
| | | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் மானிய நிதி | மத்திய நிதி குழு / மாநில நிதி குழு மானிய நிதி | மாநில நிதி குழு மானிய ஊக்க நிதி | நகராட்சி பங்களிப்பு |
| தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2018–19ன் கீழ் தார்சாலை அமைத்தல் | 5.00 | 2.30 | 1.50 | 0.70 | 0.50 |

**அலுவலகக்குறிப்பு**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட நிதி பங்கீட்டின் படி செலவினம் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2309/2018/இ1)

**பொருள் எண்.2**

இந்நகராட்சியில் 2018–2019ஆம் ஆண்டின் அலுவலக உபயோகத்திற்கு தேவையான ஸ்டேசனரி பொருட்கள், எழுது பொருட்கள், பதிவேடுகள், படிவங்கள், டோனர்கள் மற்றும் இரசீதுகள் முதலியன அரசினால் அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு சங்க நிறுவனங்களிடமிருந்து தேவைக்கேற்ப தவணை முறையில் பெற்றிடவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ..8.00 இலட்சத்திற்கு (ரூபாய் எட்டு லட்சம் மட்டும்) தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

சென்ற முறை மேற்கண்ட பொருட்களை வழங்கிக் கொண்டிருந்த அரசு அங்கீகாரம் பெற்ற திருச்செங்கோடு பெண்கள் எழுது பொருட்கள் தயாரிப்போர் மற்றும் கூட்டுறவு சங்கத்திடமிருந்து பெற அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.3124/2018/பி3)

**<u>பொருள் எண்.3</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டு பகுதிகளில் குப்பைகளை சேகரித்து அனிமூர் குப்பை கிடங்கில் கொட்டுவதற்கு சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.11199/18 வழக்கு சம்மந்தமாக வழக்கறிஞர் திரு.ஏழுமலை அவர்களிடம் இருந்து வழக்கறிஞர் திரு.சீனிவாசன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தற்சமயம் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர் (வழக்குகள்) அவர்களின் அறிவுரைப்படி வழக்கறிஞர் திரு.சீனிவாசன் வழக்கறிஞரிடமிருந்து வழக்கறிஞர் திரு.ஜி.பி.ராஜேந்திரபிரசாத் அவர்களின் ஒப்படைக்க ஆணையரின் அறிவுரையின்படி திரு.ஜி.பி.ராஜேந்திரன் வழக்கறிஞரிடம் இவ்வழக்கை ஒப்படைக்கவும் மற்றும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுசுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொதுநிதியில் இருந்து வழக்கறிஞர் திரு.ஜி.பி.ராஜேந்திரபிரசாத் அவர்களுக்கு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.1940/2018/எச்1)

**<u>பொருள் எண்.4</u>**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான காலியிடங்கள் குத்தகைக்கு விடப்பட்டது . நிர்வாக நலன் கருதி நகராட்சி மூலம் பூட்டி சீல் வைக்கப்பட்டது. இதன் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.15296/18, 1597/18, 15298/18, 15299/18, 15300/18, 15301/18, 15302/18, 15303/18 ஆணையாளர், திருச்செங்கோடு நகராட்சிக்கு எதிராக குத்ததகைதாரர்கள் வழக்கு தொடர்ந்துள்ளனர். மேற்கண்ட வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராகி தொடர்ந்து வழக்கினை நடத்த திரு.பி.ஸ்ரீனிவாஸ், சென்னை உயர்நீ.மன்ற வழக்கறிஞர் அவர்களை நியமனம் செய்தும் வழக்கு ஒன்றுக்கு ரூ.7,500/— வீதம் மொத்தம் 8 வழக்கிற்கு ரூ.60,000/— வழக்கு கட்டணமாக வழங்க கடிதம் வழங்கியுள்ளார். எனவே மேற்கண்ட தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.3069/18/அ1)

**<u>பொருள் எண்.5</u>**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான காலியிடங்கள் நகராட்சி மூலம் கடந்த 18.06.2018ந் தேதி வருவாய் துறை மற்றும் காவல் துறை அலுவலர்கள் முன்னிலையில் பூட்டி சீல் வைக்கப்பட்டது. மேற்கண்ட காலியிட குத்தகைதாரர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடராமல் இருக்கும் பொருட்டு அவசர அவசியம் கருதி கேவியட் மனு திரு.எம்.ரவி, எம்.ஏ., எம்.எல்., அரசு வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மேற்கண்ட கேவியட் மனு தாக்கல் செய்தமைக்கு வழக்கு கட்டணமாக ரூ.15,000/– திரு.எம்.ரவி, அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) ஆவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

(கோப்பு எண்.6341/12/அ1)

**<u>பொருள் எண்.6</u>**

சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.20590/2014ல் மாணிக்கம் மற்றும் பலர் காலியிடம் குத்தகை தொடர்பான வழக்கிற்கு சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீனிவாஸ் அவர்கள் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை தொடர்ந்து நடத்தவும் மற்றும் வழக்கின் தற்போதைய நிலை குறித்து மேல் நடவடிக்கை தொடரவும் சட்டக் கருத்துரு வழங்கியுள்ளார். மேலும் மேற்கண்ட வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15,000/– வழங்குமாறு கடிதம் கொடுத்துள்ளார். எனவே மேற்கண்ட வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீனிவாஸ் அவர்களுக்கு ரூ.15,000/– தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) ஆவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

(கோப்பு எண்.6341/12/அ1)

**<u>பொருள் எண்.7</u>**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான கடைகள் 9 வருடங்கள் முடிவுற்ற கடைகளின் மீது நடவடிக்கை எடுத்து தற்போது அங்காடி மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்த கண்காணிப்பு குழு அனுமதியுடன் நிர்ணயிக்கப்பட்டு அறிவிப்பு வழங்கப்பட்டது. இதில் பல முறை அறிவிப்பு வழங்கியும் வாடகையும் செலுத்தாமலும் (R) நகராட்சி வசம் கடையினை ஒப்படைக்காமலும் இருக்கும் குத்தகைதாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு திரு.எம்.ரவி எம்.ஏ, எம்.எல் அரசு வழக்கறிஞர் அவர்கள் சட்டக் கருத்துரு வழங்கியுள்ளார். சட்டக் கருத்துரு வழங்கியமைக்கு வழக்கு கட்டணமாக ரூ.5,000/– வழங்க கடிதம் வழங்கியுள்ளார். மேற்கண்ட தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.8124/17/அ1)

**<u>பொருள் எண்.8</u>**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான காலியிடங்களை குத்தகைக்கு விடப்பட்டது. நிர்வாக நலன் கருதி மேற்கண்ட காலியிடங்களை நகராட்சி வசம் ஒப்படைக்க அறிவிப்பு வழங்கப்பட்டது. நகராட்சி வசம் ஒப்படைக்காத காலியிடங்களை நகராட்சி மூலம் பூட்டி சீல் வைக்கப்பட்டது. மேற்கண்ட சீல் வைக்கப்பட்ட கடைகள் குறித்து கருத்துரு திரு.எம்.ரவி, எம்.ஏ.,எம்.எல்., அரசு வழக்கறிஞர் அவர்கள் சட்டக் கருத்துரு வழங்கியுள்ளார். மேற்கண்ட சட்டக் கருத்துருவிற்கு கட்டணமாக ரூ.5,000/– வழங்குமாறு கடிதம் அனுப்பியுள்ளனர். எனவே மேற்கண்ட தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.6341/12/அ1)

பொருள் எண்.9

திருச்செங்கோடு நகராட்சி பகுதிகளில் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக ரூ.678.90 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய மதிப்பீட்டுடன் திருத்திய பிரேரணைகள் சமர்ப்பிக்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl. no | Description | | Cost in Rs. |
|---|---|---|---|
| 1 | Name of work: | Construction of Micro Compost center at Kollapatti Housing Board C Type Park in Tiruchengode Municipality. | 4500000.00 |
| 2 | | Construction of Micro Compost center at Kollapatti Housing Board D type Park in Tiruchengode Municipality. | 5700000.00 |
| 3 | | Construction of Micro Compost center at Koottapalli Park in Tiruchengode Municipality. | 5700000.00 |
| 4 | | Construction of Micro Compost center at New Bus Stand North side open space in Tiruchengode Municipality. | 5700000.00 |
| 5 | | Construction of Micro Compost center at Salappalayam Park in Tiruchengode Municipality. | 5700000.00 |
| 6 | | Construction of Micro Compost center at Sanarpalayam Park in Tiruchengode Municipality. | 5700000.00 |
| 7 | | Construction of Micro Compost center at Sandaipettai Weekly Market in Tiruchengode Municipality. | 7490000.00 |
| 8 | | Supply and Delivery Of Battery Operated Vehicle 38 nos and Light Commercial Vehicle 6 Nos for Tiruchengode Municipality. | 10200000.00 |
| 9 | | Removal Of Legacy Waste Dumped In The Animoor Compost Yard Through Bio-Mining Process for Tiruchengode Municipality. | 17200000.00 |
| | | **Total Amount .** | **67890000.00** |

அலுவலக குறிப்பு:

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 1447/2017/இ1

**<u>பொருள் எண். 10</u>**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி நடுநிலைப்பள்ளி கொல்லப்பட்டியில் மாணவ, மாணவிகள் பயன்படுத்தும் கழிப்பிடங்களில் மேற்கூரை இல்லாமலும், மற்றும் பழுதடைந்தும் உள்ளதால் மாணவ, மாணவிகள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகின்றனர் . எனவே நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் நேரடி ஆய்வின் அடிப்படையில் மேற்கண்ட இடத்தில் உள்ள கழிப்பிடத்தில் அலுமினியம் Sheet கொண்டு மேற்கூரை அமைக்கவும், சுற்றுசுவர் உயரப்படுத்தவும், டைல்ஸ் பழுதடைந்ததை சரிசெய்யவும் மற்றும் இதர மராமத்து பணி மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2,30,000/– க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.3164/2018/இ2

**<u>பொருள் எண். 11</u>**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16, சட்டையம்புதூர் ஒருங்கிணைந்த சுகாதார வளாக கழிப்பிடம் அருகில் போதிய மழைநீர் வடிகால் வசதி இல்லாததால் மழைநீர் அடிக்கடி தேங்குவதால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதால் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் நேரடி ஆய்வில் அறிவுறுத்தப்பட்டு மேற்கண்ட இடத்தில் மழைநீர் வடிகால் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3,00,000/–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்

கோப்பு எண்.3080/2018/இ1

**பொருள் எண். 12**

திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண். 22, SND ரோடு பகுதியில் உள்ள வேப்பமரத்தை வெட்டி அப்புறப்படுத்த திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 5361/2017/டி, நாள். 08.02.2018ன் படி அனுமதி பெறப்பட்டும் மேலும் மாவட்ட வன அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எண். 1603/2018/தி2, நாள். 24.04.2018ன் படியும் மேற்கண்ட மரத்தை வெட்டி அப்புறப்படுத்த ஆரம்ப விலையாக ரூ. 904/– நிர்ணயித்து ஏலம் நடத்த தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.7521/2018/இ1

**பொருள் எண்.13**

திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண். 22, SND ரோடு பகுதியில் உள்ள வேப்பமரத்தை வெட்டி அப்புறப்படுத்த மற்றும் மரத்தை உபயோகிக்க 13.06.2018 அன்று நடைபெற்ற ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விபரம் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏலம் கோரியவரின் பெயர் | உயர்ந்தபட்ச கேள்வி |
|---|---|---|
| 1 | AA. லோகநாதன், நெசவாளர் காலனி | 1. ரூ.950/– |
| 2 | எம். அன்புக்கரசன், நெசவாளர் காலனி | 2. ரூ.1000/– |

அலுவலக குறிப்பு:

1. மேற்கண்ட ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலம் கோரிய வ.எண்.2ல் உள்ள எம். அன்புக்கரசன், நெசவாளர் காலனி என்பவருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 7521/2018/இ1

**<u>பொருள் எண்.14</u>**

திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் அரசு மருத்துவமனை சுற்றுசுவர் அருகில் உள்ள வேப்ப மரத்தின் கிளைகள் மழைக்காலங்களில் அடிக்கடி விழுந்து சேதம் அடைவதால் நகராட்சி ஆணையர் அவர்களின் அறிவுரையின் படி கிளைகளை வெட்டி அப்புறப்படுத்த ரூ. 1000/– ஆரம்ப தொகையாக நிர்ணயித்து ஏலம் நடத்த தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.2825/2018/இ1

**<u>பொருள் எண்.15</u>**

திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் அரசு மருத்துவமனை சுற்றுசுவர் அருகில் உள்ள வேப்ப மரத்தின் கிளைகள் வெட்டி அப்புறப்படுத்த மற்றும் மரத்தை உபயோகிக்க 13.06.2018 அன்று நடைபெற்ற ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விபரம் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏலம் கோரியவரின் பெயர் | உயர்ந்தபட்ச கேள்வி |
|---|---|---|
| 1 | கே. கந்தசாமி, மல்லூர் | 1020 |
| 2 | பி. தனபால், வெண்ணந்தூர் | 1000 |

அலுவலக குறிப்பு:

1. மேற்கண்ட ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலம் கோரிய வ.எண்.1ல் உள்ள கே. கந்தசாமி, மல்லூர் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 2825/2018/இ1